### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 207 வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் – உணவு வழங்கப்பட்டது!

சென்னை, செப்.15-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 207 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (14.09.2025), வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 97 வெள்ளாளர் தெரு, பரசுராம ஈஸ்வரர் கோயில் மேற்கு மாட வீதி சந்திப்பு கங்கையம்மன் கோயில் தெரு. 2) வட்டம் 97 அ குப்புசாமி நகர், பாளையம் பிள்ளை நகர் சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் வே.வாசு, கூ.பீ.ஜெயின், லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாள், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி (எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ்.பாபு. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு என்னும் முன்னெடுப்பில்

# 3 லட்சத்து 38ஆயிரம் பேர் புதிதாக தி.மு.க.வில் இணைந்துள்ளனர்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேட்டி!

திருவள்ளூர், செப்.15-

தமிழ்நாட்டின் மண், மொழி மற்றும் மானம் காக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்க வைக்கப்பட்ட ஓரணியில் தமிழ்நாடு என்னும் முகாமானது கடந்த ஜூலை 1ம் தேதி தொடங்கி வைத்து தமிழ்நாடு முழுவதும் உறுப்பினர் சேர்க்கையானது நடைபெற்று வருகிறது அதில் ஒரு பகுதியாக திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி ரயில் நிலையம் அருகே உள்ள திமுக அலுவலகத்தில் ஓரணியில் தமிழ்நாடு சார்பில் மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.



இதில் பேசிய அமைச்சர் அவர்கள், ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 70 நாட்களில் 68,000 வாக்கு சாவடிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டையும் சந்தித்துள்ளோம் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒரு கோடியை தாண்டி உள்ளது. பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு 68,000 வாக்கு சாவடிகளிலும் தமிழ்நாட்டை காக்கும் உறுதிமொழி ஏற்பு கூட்டங்கள்

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் ஆவடி, பூந்தமல்லி ஆகிய இரண்டு தொகுதிகளில் சேர்த்து 854 வாக்கு சாவடிகளிலும் தமிழ்நாட்டை காக்கும் உறுதிமொழி ஏற்பு கூட்டங்கள் இன்று நடைபெறுகிறது. இரண்டாம் கட்டம் செப்டம்பர் 17ஆம் தேதி கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் ஒவ்வொரு வாக்கு சாவடிகளிலும் இருந்தும் முன்மொழியப் பட்ட தீர்மானங்கள் ஒருங்கிணைக்கப்படும் மூன்றாம் கட்டம் செப்டம்பர் 20 மற்றும் 21 ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான கூட்டங்கள் நடைபெற உள்ளது என கூறினார்.

ஓரணியில் தமிழ்நாடு முகாம் மூலம் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் 3 லட்சத்து 38 ஆயிரம் பேர் புதிதாக திமுகவில் இணைந்துள்ளதாக அமைச்சர்ஆவடி நாசர் அவர்கள் கூறினார்.

ஓரணியில் தமிழ்நாடு என்னும் முகாமில் இது வரை ஆவடி தொகுதியில் மட்டும் 2,14,492 புதிய வாக்காளர்களாக திமுகவில் இணைந்து உள்ளனர்.இதே போல் ஆவடி பூந்தமல்லி தொகுதியில் 338161 பேரை புதிய உறுப்பினர்களாக திமுகவில் இணைந்துள்ளதாக அமைச்சர் சாமு.நாசர் தெரிவித்தார்.

மேலும் இளையராஜாவை பாஜக எம். பி யாக பார்க்காமல் ஒரு கலைஞராக பார்க்க வேண்டும், அன்னக்கிளியில் ஆரம்பித்து இசையில் புரட்சி செய்தவர் அவர். தமிழரை நாம் பாராட்டவிட்டால் யார் பாராட்டுவது நமக்கு தற்பெருமை இல்லாததால் தமிழன் தாழ்ந்து இருப்பதாகவும் கருத்து தெரிவித்தார். இளையராஜா ஒரு தமிழர், ராமதாஸ் ஒரு தமிழர் அவரை பாராட்டுவது தவறில்லை என தெரிவித்தார்.


## 24 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**மாஸ்டர் தமிழ்ப்பித்தன் (எ) ம.வேலுச்சாமி**

(மாநில தொண்டரணிச் செயலாளர், தி.மு.க.)

15.9.2001 அன்று கழகத் தலைவரிடம் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்த எங்கள் இதய தெய்வத்திற்கு நினைவஞ்சலி!

*மகன்*

**வேல்.உமாகாந்த்** துணைச் செயலாளர்,

மாநில பொறியாளர் அணி


### ஜெ.நடராஜன் தலைமை! 167–வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்!

# 500 பேருக்கு காலை உணவு! உறுதிமொழி ஏற்பு!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் –ஆர்.எஸ்.பாரதி – என்.சந்திரன் எம்.சி. வழங்குகின்றனர்!

சென்னை,செப்.15-

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (15.09.2025 - திங்கட்கிழமை) காலை 7.00 மணி அளவில் எம்ஜிஆர் ரோடு ஸ்டேட் பாங்க் காலனியில் அமைந் துள்ள அண்ணா திருவுருவ சிலைக்கு மரியாதை செலுத்தி 167வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன் தலைமையில்,

அமைச்சர் தா.மோ.அன்பரசன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12-வது மண்டலக்குழு தலைவருமான, என். சந்திரன் ஆகியோர் கழகக் கொடியேற்றி, ஏழை எளிய பொதுமக்கள் மற்றும்தூய்மை பணியாளர்கள் உள்பட 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குகின்றனர்.

மற்றும் அனைத்து பாகங்களிலும் உள்ள அண்ணா திருவுருவ படத்திற்கு முன்பு உறுதிமொழி ஏற்க இருப்பதால் ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி மற்றும் வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், பாக முகவர்கள் (BLA), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.



தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் தெற்கு பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் என்.ராஜா – சூரியகுமாரி இவர்களது இல்ல மணவிழாவில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் எஸ்.சேகர் எம்.சி, தெற்கு பகுதி துணைச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி எம்.சி, இளைஞர் அணி அமைப்பாளர் பா.சுந்தர், கணேசன், குமரவேல், ஐசக். ஜெயதுரை மற்றும் கழக முன்னோடிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தாம்பரம் மாநகரச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா முன்னிலையில், பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர் முன்னிலையில், 61வது வட்டக் கழக செயலாளர் ஆ.மஞ்சுநாதன் தலைமையில், தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 61வது வட்ட கழக திமுக சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்தில் கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி கலந்துகொண்டு வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசனை வழங்கினார்.

# அன்னைமொழி காத்து நின்ற அறிவுலகமேதை அண்ணாவின் பெரும்புகழ் ஓங்குக!



ஈராயிரம் ஆண்டுகளாக அன்னைத் தமிழ்தவமிருந்து பெற்றெடுத்தத் தலைமகன்!

நோக்கும் இடமெல்லாம் ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் காத்திருந்த தமிழ் இளைஞர் படை மீது, கனிவான மொழியில், தம்பி.... என்றழைத்து, தந்தையுறவை, தாயுறவை மிஞ்சிய சகோதர உணர்வை ஏற்படுத்தி, அண்ணா! அண்ணா! என எந்நாளும் இளைஞர் உலகம் சுற்றி வந்து துதிபாட, அவர்களின் அறிவுப்பசி போக்கி, அரசியலறிவை வளர்த்திட்ட அறிவுலகமேதை அறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்தநாள் இன்று.

மதங்களும், மார்கங்களும், சமய நெறிகளும் தழைத்தோங்கிய மாநகர் காஞ்சி!

தறியோசையும், தமிழோசையும் தழைத்திட்ட வரலாற்று சிறப்பு மிக்க நகரம் காஞ்சிபுரம்!

சாகுந்தலம், நாகாநந்தம், ரத்னாவளி, பிரியதரிஷிகா, எனும் புகழ்பெற்ற நூற்களை இயற்றிய காளிதாஸப் பெருங்கவிஞனால், “நகரேஷு காஞ்சி” (நகரங்களில் சிறந்தது காஞ்சி) எனப்போற்றப்பட்ட திருவிடம் காஞ்சி!

கல்லெல்லாம் சிலைசெய்து, கலைகளுக்கு பெருமை சேர்த்து, வடக்கே ஆணவ ஆட்சி புரிந்த சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியை வாதாபி போர்க்களத்தில் வென்று வாதாபி கொண்டான் எனும் பெருமை கொண்ட இரண்டாம் நரசிம்ம வர்மன் நல்லாட்சி புரிந்த நகரம் காஞ்சிபுரம்!

இதே காஞ்சியில் 1909 ஆண்டில் செப்டம்பர் 15 அன்று தோன்றினார் நமது சிந்தையெல்லாம் நிறைந்திருக்கும் அறிஞர் அண்ணா அவர்கள்.

தனது நாவன்மையால், எளிமை, இனிமை, எவர்மனத்தும் நோகாத செயற்பாட்டால், எதிர்ப்பின் நெற்றிப் பொட்டில் தவறாமல் தாக்கும் உத்தியுடன் வெற்றி வலம் வந்து, வித்தையிலும் விந்தை இதுவென சுதந்திர இந்தியாவில் முதன்முறையாக மாநிலக் கட்சி ஒன்று அன்று ஆட்சியதிகாரம், படைபலம், பணபலம் கொழுத்திருந்த காங்கிரஸை எதிர்த்து ஆட்சி அமைத்தார் அரசியல் விற்பன்னர் அண்ணா!

சரித்திர பின்புலம் ஏதுமின்றி, சாம்ராஜ்ஜிய பெருமையின்றி, சாமானிய குடும்பத்தில் தோன்றி, தும்பை மலர் உள்ளத்தால், தூய இலட்சியங்களை நெஞ்சில் ஏற்று, அறிவுநடைத்தமிழால் ஆரியத்தின் வேரறுத்து, எளிய தம்பியரின் இதயத்தில் இடம் பிடித்த சொல்லேறுழவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

தமிழுக்கு அணிகலனாய், தம்பதியர்க்கு படைகலனாய், அமுத மொழியாம் நமது அன்னை மொழியில் எரிமலைகள் செய்து, இதம் தரும் தென்றலைத் தவழ விட்டு, ஆண்ட நமது பரம்பரையின் பெருமை சொல்லி, அன்று அடிமைத்தளையில் மாண்டுக்கிடந்த தமிழர்களை அவர்கள் மீண்டிட தமிழ் போர்க்கொடி உயர்த்திய மேலோன் அறிஞர் அண்ணா அவர்கள்.

அன்று அண்ணாவின் மேடைப்பேச்சிற்கு இளைய தமிழினமே கட்டுண்டு கிடந்தது.

“ஏறுகிறார் அண்ணா மேடையென்றால், அது மகுடி நாதம்!

இசைக்கின்றார் என்று சொன்னால், அது தமிழர் வேதம்!”

என்று தனது அண்ணனின் தமிழை போற்றினர் நமது தலைவர் கலைஞர் அவர்கள்.

எளிமை, இரக்கம், அன்பு, என மனிதநேயப் புனிதராக திகழ்ந்திட்ட அண்ணா, யாரேனும் தன்னை விட்டுப் பிரிய நேர்ந்தால், “சட்டையை கழற்றியதை போலல்ல தம்பி, சதை பிய்ந்ததைப் போல் துடிக்கிறேன்” என்பார்.

பொதுவாக அண்ணாவுக்கு கோபம் வராது என்பார்கள் ஆனால் புயலுக்கு பின்னே அமைதி! என்பதுபோல பல பொறுமைகளுக்குப் பின்னே, தவிர்க்க முடியாமல் அண்ணாவின் கோபம் வெளிப்பட்டுவிடும்.

60 களில் தாமாகவே, வீம்பாகவே முன் வந்து கழகத்தில் கலகம் விளைவிக்க எத்தணித்த ஈவேகி சம்பத் கும்பல் ஆரம்பத்தில் அண்ணாவை உச்சி குளிர பேசி, “நான் அண்ணாவின் அன்புத்தம்பி. அண்ணா என்னை வாடா தம்பி சம்பத் என்பார். அவர் கரம் பிடித்து வளர்ந்தவன் நான். அவர் சாப்பிட்டு மீதமிருந்த பக்கோடாவை சாப்பிட்டவன் இந்த சம்பத்” என அன்புருக பேசிய சம்பத் அவர்கள் தான், பின்னர் தடித்த வார்த்தைகளை தாராளமாக, ஏராளமாக கணைகளாக்கி, அண்ணாவை தாக்கி வந்தார்.

அண்ணா ஒரு சர்வாதிகாரி, ஜார்மன்னர் என்றெல்லாம் பேசி, அண்ணாவின் வெண்பட்டு இதயத்திற்கு வேதனையை கூட்டினார்.

ஒரு கட்டத்தில் தானொரு இடதுசாரி எனும் பொருள்பட I AM A LEFTIST. என்று கொக்கரித்தார்.

அமைதியே வடிவான அண்ணா பொறுமையுடன் சொன்னார், “LEFTIST ARE LEFT THE PARTY.” என்று.

அண்ணாவால் வளர்த்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பலர் பின்னாளில் பெரும் புகழடைந்தனர். ஆனால் அதேவேளையில் அண்ணாவை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் அரசியல்வரலாற்றில் முகவரியையும் இழந்தே போனார்கள்.

பொறுமையின் இலக்கணம் நமது பேரறிஞர் அண்ணா.

1967 ஆட்சி மாற்றத்திற்கு முன்பு மக்கள் நலன் சார்ந்த போராட்டம் ஒன்றிற்காக மறியலில் ஈடுபட்டிருந்த அண்ணா, என். வி. நடராஜன் போன்ற கழக முன்னணித் தலைவர்களை காவல்துறை கைது செய்தது.

அன்று காவல்துறை ஐ. ஜி யாக இருந்த எப். வி. அருள் எனும் அதிகாரி அண்ணா உள்ளிட்டோரை சிறையில் அடைக்கும் முன்பு அவரது கையில் வைத்திருந்த லத்தியால் அண்ணா அவர்கள் அணிந்திருந்த கைத்தறி தூண்டை எடுத்துத் தள்ளி, அண்ணாவை எள்ளி நகையாடுவதாக நினைத்துக் கொண்டார்.

உடனே கோபமுற்று, கொதித்தெழுந்த தோழர்களை அமைதிப் படுத்திய அண்ணா, மறுநாள் திராவிடநாடு இதழில்,

“ பார்த்தாயா தம்பி, சென்னை காவல்துறை ஐ. ஜி. அருளின் செய்கையை.

நான் ஒரு இயக்கத்தின் தலைவன், லட்சக்கணக்கான தம்பியருக்கு அண்ணன் என்றெல்லாம் பார்க்காமல் எனது மேல் துண்டை போலீஸ் லத்தியால் அகற்றினர்.

அதற்கு காரணமாய் கடைசியில் அவர் சொல்கிறார் சிறையில் துண்டோடு என்னை அடைத்தால் நான் தூக்குப் போட்டு செத்துவிடுவேனாம். அவ்வளவு கோழையாம் உனது அண்ணன்.

ஒரு மாபெரும் இயக்கத்தின் தலைவராக என்னை அவர் மதித்திராவிட்டால் கூட, எனது படிப்பிற்காவது மரியாதை தந்திருக்கலாம். அவர் பி. ஏ. படித்தவர் ( Bachelor of Arts. கலைகளில் பிரம்மச்சாரி )

நான் எம். ஏ. படித்தவன் ( Master of Arts கலைகளில் தலைவன்) என்று வேதனையோடு எழுதினார்.

காலம் கனிந்தது. அண்ணாவின் கனவுகள் மெய்ப்பட்டது ஆட்சியதிகாரம் அண்ணாவின் கைகளுக்கு வந்தது. அரண்டு, மிரண்டு போயிருந்த அருள் மிடுக்கான முதலமைச்சர் அண்ணாவின் முன் கூனிக்குறுகி நின்றார்.

இன்னா செய்தாரையும் அவர் நாண, நன்னயம் செய்த பெருவுள்ளம் கொண்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

காஞ்சிபுரத்தில் பள்ளிப்படிப்பை முடித்து பின்னர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்றபோதே தமிழ் மொழியில் ஆற்றல் மிக்க பேச்சாளராக அண்ணா திகழ்ந்தார்.

அவரது பேச்சை மாணவர்கள் மட்டுமின்றி, கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர்களும் ஆர்வமுடன் காத்திருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

தந்தை பெரியாரின் கரம் பிடித்து, தடம் பற்றி நீதிக்கட்சியிலும், திராவிடர் கழகத்திலும் பெரியாரின் தளபதியாகவே பணியாற்றினார் அண்ணா அவர்கள். அவரின் பகுத்தறிவு கணைகளாய் பாயும் பேச்சும் சாதி, சமய புரட்டுக்களை சாடும் எழுத்தும் மாற்றாரை மருளச்செய்தது.

1937 ல் தஞ்சை நகரை அடுத்த பள்ளி அக்ரகாரத்தில் சுயமரியாதை மாநாடு நடந்தது.

அந்த மாநாட்டில் அண்ணா பற்றி அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்கள் பேசியபோது,

“பத்தாயிரம் ப. ஜீவானந்தங்கள் நமது இயக்கத்தை விட்டுப் போனாலும், முப்பதாயிரம் முத்துசாமி வல்லத்தரசுகள் நம்மை விட்டு விலகினாலும், பல்லாயிரம் நீலாவதி இராம சுப்பிரமணியன்கள் நீங்கினாலும், நமது இயக்கத்தை கட்டி காத்து வளர்க்க, அறிவாற்றல் மிக்க பெரும் படிப்பு படித்த, ஈடும் எடுப்பும் அற்ற ஒரு பெரும் பேச்சாளரும், சிந்தனையாளரும், செயல்வீரருமாகிய அண்ணாதுரை நமக்கு கிடைத்திருக்கிறார்.


வழக்கறிஞர்

**வெ.அன்புவாணன்**

கொள்கைப் பரப்பு

துணைச் செயலாளர்




அவர் ஒருவரே போதும். எதிரிகள் நம்மீது ஏசல் ஈட்டிகள் வீசுகிறார்கள். அந்த ஈட்டிகள் எட்டின மட்டும் தான் பாயும். பணபலத்தை வைத்து நம்மை மிரட்டுகிறார்கள்: அவர்களின் பணம் பாதாளம் வரையில்தான் செல்லும். எங்கள் அண்ணாதுரையின் அறிவுச்சுடர், எதிரிகளின் அண்ட, பிண்ட, பகிரண்ட சராசரங்களையெல்லாம் துளைத்துச் சென்று, அவற்றையெல்லாம் சுட்டெரித்து, படு சம்பலாக்கிடும் என்பது திண்ணம். “

என்று புகழாரம் சூட்டியபோது அண்ணாவுக்கு வயது 28 மட்டுமே.

இப்படி ஆற்றல் மிகுந்த அறிஞர்! அறிவுசார் புத்தகங்களை படித்திட்ட மேதை!

சமூகத்தில் மூழ்கி, முடைநாற்றம் வீசிய சாதிய சழக்குகளை இயல்பான பாத்திரங்கள் மூலம் விளக்கி, களைந்திட்ட நாடகாசிரியர்!

அடுத்தவர் மனம் நோகாமல், எடுத்தக் காரியத்தை முடித்துக் காட்டும் வல்லமையாளர்!

அன்னைமொழி காத்து நின்ற அறிஞர்!

இருளகற்றிய உதயசூரியன்!

தன்மான உணர்வு தந்த அண்ணன்!

தமிழினத்திற்காக சுகத்தை இழந்த மன்னன்!

சத்தியத்தின் காவலர்!

மக்கள் சிந்தையெங்கும் நிறைந்து வாழும் காருண்ய மூர்த்தி!

கொத்தடிமை நீக்கிய அரசியல் மேதை!

அண்ணா அவர்களின் பிறந்த இந்நன்னாளில், அவர் இதயத்தை இரவலாகப் பெற்ற நமது உயிரனைய தலைவர் கலைஞர், கலைஞரின் அடிச்சுவடு மாறாமல், அவரது தடம் பற்றி, தாயக பணியாற்றும் திராவிடப் பேரரசர், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தமிழினத்தளபதியவர் நமது கண்ணாய் இருந்து, நெஞ்சில் நிறைந்த அண்ணாவின் ஆட்சியை, தலைவர் கலைஞர் கனவுகண்ட மக்கள் நலன் காக்கும் ஆட்சியை நடத்துகிறார்.

67 ல் அமைந்த ஆட்சியை பெரியாருக்கு காணிக்கை என்றார் அண்ணா.

இப்போது நமது தளபதியவர்கள் தமது ஆட்சியை அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருக்கு காணிக்கையாக்கி, காருண்யம் மிகுந்த நல்லாட்சியை தொடர்கிறார்.

ஆம்! அறிஞர்அண்ணா, தலைவர் கலைஞர் வழிநடக்கும் திராவிட மாடல் ஆட்சி 2026: லும் தொடர்ந்திட சூளுரை ஏற்போம்.

அண்ணா பிறந்தநாளாம் இந்த செப்டம்பர் 15 உறுதிமொழி ஏற்போம்!

அதோ.....,

செப்டம்பர் 17 கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவிற்கு, “அழைக்கின்றார்! அழைக்கின்றார்! அழைக்கின்றார்! திராவிடப் பேரரசர் தளபதி! ”

ஓங்கட்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரும்புகழ்!!